# ‘மியாட்’ மருத்துவமனையில் ‘ஸ்ட்ரோக் ரீ ஸ்டோர்’ மையம்



மணப்பாக்கம், ‘மியாட்’ மருத்துவமனையில், ‘மெக்கானிக்கல் திராம்பாக்டமி’யை அறிமுகப்படுத்தி, தீவிரமான பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களை குணமாக்கிய டாக்டர்களுடன், மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் மோகன்தாஸ் மற்றும் தலைவர் மல்லிகா மோகன்தாஸ்.

சென்னை, நவ. 7–

தீவிர பக்கவாதத்தால் பாதிக்கப்படுவோருக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையிலான சிறப்பு மையம், சென்னை, ‘மியாட்’ மருத்துவமனையில், இன்று திறக்கப்படுகிறது. இந்த மையத்திற்கான கட்டணமில்லா தொலைபேசி எண்ணும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, மியாட் மருத்துவமனை நிறுவனர் மோகன்தாஸ், நேற்று கூறியதாவது:

பெரிய ரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்பே, ‘ஸ்ட்ரோக்’கிற்கு காரணம். இந்த அடைப்பை நீக்கும் முயற்சியில் பெரிய வெற்றி கிடைப்பதில்லை. எனவே, மியாட் மருத்துவமனையில், ‘ஸ்ட்ரோக் ரீ ஸ்டோர்’ எனப்படும், 24 மணி நேர சிறப்பு மையம் இன்று துவக்கப்படுகிறது. இரண்டு மடங்கு பலன் அளிக்கும், ‘மெக்கானிக்கல் திராம்பாக்டமி’ என்ற, சிகிச்சையை அறிமுகம் செய்கிறோம்.

இது, ‘ஸ்ட்ரோக்’கிற்கு மூல காரணமான, ரத்த அடைப்பு, அறுவை சிகிச்சை இன்றி, ‘ஸ்டெட் ரெட் ரிவர்’ எனப்படும், பிரத்யேக சாதனத்தால் உறிஞ்சப்படும். இதனால், ரத்த ஓட்டம் இன்றி செயல் இழந்து வரும் மூளை செல்கள் உயிர்ப்பிக்கப்படுவதால், ‘ஸ்ட்ரோக்’கால் ஏற்பட்ட பாதிப்பு நீங்கிவிடும்.

இத்தகைய பிரத்யேக வசதிகளுடைய மையம், இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. பக்கவாத பாதிப்புக்கு பின்னும், இயல்பான வாழ்க்கையை மீட்டுத் தரும் மையமாக இது செயல்படும். இதற்காக, ‘105710’ என்ற முழுநேர, கட்டணமில்லாத, ‘ஸ்ட்ரோக் எமர்ஜென்சி’ தொலைபேசி எண் தரப்பட்டுள்ளது. பொதுவாக, பக்கவாதம் வந்த, மூன்று மணி நேரத்திற்குள் உரிய மையத்திற்கு சென்றால், முழுமையாக குணப்படுத்த முடியும். இந்த காலம் தான், ‘கோல்டன் அவர்’ எனப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

சிறப்பு மைய அறிமுக நிகழ்வில், மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நரம்பியல் துறைத் தலைவர் கிருஷ்ண பாலகோபால் உட்பட, பலர் பங்கேற்றனர்.